# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.140/2025

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜகோபால் | Father's Name | : | பொன்னுதுரை |
| Village | : | வைப்பூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of February 2026.**

**(A1 to A3 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வைப்பூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 18.05.2017 அன்று 11.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் திருவாரூர் தாலுகா காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது தலைமை காவலர் வீரசேகரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று திருவாரூர் தாலுகா காவல் நிலைய கு.எண் 152/2017, இதச பிரிவுகள் 189, 307 & 3(1) of TNPPDL Act ன்படி பதிவு செய்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.4**. நான் 18.05.2017 அன்று கொரடாச்சேரி காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது கூடுதல் பொறுப்பாக திருவாரூர்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.12 17:11:54 +0530

தாலுகா காவல் ஆய்வாளராகவும் பணிபுரிந்தேன். எனது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு திருவாரூர் தாலுகா காவல் நிலைய கு.எண் 152/2017 வழக்கு கோப்பினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.05.2017 அன்று காலை 11.45 மணிக்கு சம்பவ இடமான விளமல் கூட்டுறவு நகர் ஆர்ச் எதிரே கார் உரசி சென்ற இடத்தை சாட்சிகள் சிவராமன், அசோகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5**. அன்றைய தினமே சன்னாநல்லூர் வளைவருகே கார் மரத்தில் மோதி நின்ற இடத்தை சாட்சிகள் சிவானந்தம், சுப்பையாபிள்ளை ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மற்றொரு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6**. 19.05.2017 அன்று 16.00 மணிக்கு எதிரிகள் செந்தாமரை, இந்திரஜித், அம்மாசி, ஜோதிராஜன் ஆகியோர் மருத்துவ சிகிச்சை முடித்து வெளியில் வந்தவர்களை காவல் நிலையம் கொண்டுவந்து விசாரணை செய்து 16.30 மணிக்கு எதிரிகளை குற்ற காரணம் கூறி கைது செய்தேன். 1ம் எதிரி செந்தாமரை தானாக முன்வந்து கொடுத்த

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.12 17:12:00 +0530

ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சிவராமன், அசோகன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் என்னை கூட்டிகிட்டு போனீங்கன்னா போலீஸ்காரங்களை காரை ஏற்றி கொலை செய்ய முயற்சித்த இடத்தை அடையாளம் காட்டியும் காரை தங்களிடம் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்ற எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.7**. அதனடிப்படையில் 17.30 மணிக்கு சன்னாநல்லூர்-முடிகொண்டான் ஆற்று பாலத்தில் சுமார் 200 மீ. தெற்கே 1ம் எதிரி செந்தாமரை ஆஜர் செய்த TN 10 K 5943 என்ற பதிவெண் கொண்ட டாடா இன்டிகா காரை மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.8**. மேற்படி கார் **சா.பொ.1**. சா.பொ.1ன் புகைப்படம் 4 எண்ணிக்கை **அ.சா.ஆ.9 வரிசை**. சா.பொ.1 ன் CD **சா.பொ.2**. சா.பொ.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.10**. சா.பொ.1 க்கான 65(B) இந்திய சாட்சிய சட்ட சான்று **அ.சா.ஆ.11**. 18.05.2017 அன்று தலைமை காவலர் வீரசேகரன், முதல்நிலை காவலர் 389 கவியழகன், FOP பிரகாஷ், முதல்நிலை காவலர் 914 சீனிவாசன், FOP வீனஸ், சாட்சிகள் சிவராமன், அசோகன், சுப்பையாபிள்ளை, சிவானந்தம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தும் 19.05.2017 அன்று சாட்சிகள் சிவராமன், அசோகன் ஆகியோரிடம் மறு வாக்குமூலமும் பதிவு செய்தேன். வழக்கு கோப்பினை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:12:05 +0530

நிலைய பொறுப்பில் ஒப்படைத்து சென்றேன்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.4 திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு 19.05.2017 மாலை 4.50 மணிக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரி. அ.சா.ஆ.4 சொன்ன நேரத்தில் பதியப்பட்ட ஆவணமில்லை எனவும் இதற்கு முன் பல புகார் வாக்குமூலங்கள் பெறப்பட்டு எங்களால் மறைக்கப்பட்டுள்ளது எனவும் சொன்னால் தவறு. அ.சா.ஆ.6 ல் விபத்து நடந்த இடத்திற்கும் சன்னாநல்லூர் பாலத்திற்குமிடையே உள்ள தூரம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரி. எனது விசாரணையில் நான் விசாரித்த காவலர்கள் யாரும் சன்னாநல்லூர் பாலம் அருகே பேரி கார்ட் வைத்தோ டேங்கர் லாரி வைத்தோ மறைத்ததாக கூறவில்லை என்றால் சரி. உதவி ஆய்வாளரின் இருசக்கர வாகனத்திற்கு எவ்வித சேதமும் இல்லை எனவும் மட்கார்ட் மற்றும் கயட்டி வைக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. சேதமடைந்த வாகனங்கள் எதையும் நான் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரி. இருசக்கர வாகனத்திற்கு சேத சான்று எதுவும் பெறவில்லை என்றால் சரி. எதிரிகள் காயம்பட்டதற்கான விபத்து பதிவேடுகள் எதையும் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எதிரிகளை எனக்கோ மற்ற போலீசாருக்கோ இந்த சம்பவத்திற்கு முன் தெரியாது என்றால் சரி. சம்பவத்திற்கு பிறகு நான் ஆள்காட்டு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:12:11 +0530

அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை என்றால் சரி. திருவாரூர் விளமலிலிருந்து மயிலாடுதுறை சன்னாநல்லூர் பாலம் வரை நிறைய CCTV Camera உள்ளது என்றால் சரி. CCTV Camera Footage யை கைப்பற்றி வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. சம்பவமே இல்லை எனவும் அதனால்தான் CCTV Camera Footage யை தாக்கல் செய்யவில்லை எனவும் சொன்னால் தவறு. எதிர்பாராமல் விபத்தில் சிக்கியவர்களை பிடித்து முன் குற்றவாளிகள் என்பதால் இந்த வழக்கில் எதிரிகளாக சேர்த்துள்ளோம் என்றால் தவறு. எதிரிகளிடமிருந்து எந்த தடய பொருளும் எடுக்கவில்லை என்றால் சரி. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் தந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. எதிரிகள் இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் தவறு. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.12 17:12:16 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.